17.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஆக. 19-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வெள்ளிக்கிழமை (ஆக.19) நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் இக் கூட்டத்தில், விவசாயம் தொடர்புடைய அனைத்துத் துறை அலுவலர்களும் கலந்து கொள்கின்றனர். விவசாயம் தொடர்புடைய தனிநபர் பிரச்னையாக இருப்பின் கோரிக்கைகளை ஆட்சியரிடம் நேரடியாக வழங்கலாம். பொதுப் பிரச்னையாக இருப்பின் மன்றத்தின் கோரிக்கையாகத் தெரிவிக்கலாம்.

### பார்த்தீனிய செடிகள் ஒழிப்பு: விவசாயிகளுக்கு செயல்விளக்கம்

நச்சுத்தன்மை கொண்ட பார்த்தீனியம் செடிகளை ஒழிப்பது குறித்து மதுரையை அடுத்த பெரியபட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு செவ்வாய்க்கிழமை செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

பார்த்தீனியம் செடிகள் ஒழிப்பு வாரத்தையொட்டி வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு நடத்தப்பட்ட பயிற்சி மற்றும் செயல் விளக்க முகாமை மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் தொடக்கி வைத்தார். அப்போது அவர் பேசியது:

பார்த்தீனியம் செடிகள் உள்நாட்டு தாவரங்களை வளர விடாமல் தடுக்கும் நச்சுத்தன்மை கொண்ட களைச் செடிகளாகும். இவை கால்நடைத் தீவனங்களையும், பயிர்களையும் வளரவிடாமல் தடுத்து வேகமாகப் பரவி மேய்ச்சல் நிலங்களையும், விளைச்சல் நிலங்களையும் பாதித்து வருகின்றன. 2009 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 20 லட்சம் ஹெக்டேர் நிலம் இச்செடிகளால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இந்த செடி விவசாயத்திற்கு மட்டுமின்றி மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் தீங்கு ஏற்படுத்தக் கூடியது. இதன் மகரந்தம் சுவாசக் கோளாறு, ஒவ்வாமை, ஆஸ்துமா, விஷக் காய்ச்சல், தோல் வியாதிகள், வயிற்றுப்போக்கு போன்ற பாதிப்புகளை ஏற்படுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. கால்நடைகளின் கணையத்தில் பாதிப்பு ஏற்படுத்துவதோடு, பால் மற்றும் இறைச்சியின் தரத்தினை பாதிக்கிறது. ஒரு செடி ஆண்டுக்கு 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரை நல்ல முளைப்புத் திறன் கொண்ட விதைகளை உற்பத்தி செய்கிறது. இவ்வாறு வேகமாகப் பரவக் கூடிய இச்செடியை அழிக்க வேண்டியது அவசியமானது. இதைக் கருத்தில் கொண்டு ஆக.16 முதல் ஆக.21 வரை பார்த்தீனியம் செடிகள் ஒழிப்பு வாரத்தை அனுசரிக்க தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார் என்றார்.

பின்னர் அவர் விவசாய நிலங்களில் ஊடுருவியிருந்த பார்த்தீனியம் செடிகளை, பள்ளி மாணவ, மாணவியருடன் சேர்ந்து அகற்றினார். வளர்ந்த செடிகளை களைக்கொல்லி மருந்துகள் மூலம் அழிப்பது குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. பின்னர் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை சார்பில் ரூ.2.27 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் வழங்கினார்.

வேளாண் இணை இயக்குநர் சே.கனகராஜ் மற்றும் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

## ஆர்.எஸ்.மங்கலம் விவசாயிகளுக்கு நீர் சேகரிப்பு, மேலாண்மை பயிற்சி

திருவாடானை தாலுகா, ஆர்.எஸ்.மங்கலம் வட்டார விவசாயிகளுக்கு நீர் சேகரிப்பு மற்றும் மேலாண்மைப் பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் மூலம், பிரதம மந்திரி வேளாண்மை நீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ், ஆர்.எஸ்.மங்கலம் வட்டார விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க மையத்தில் பயிற்சி முகாம் நடைபெற்றது. இப்பயிற்சியில், வேளாண்மை உதவி இயக்குநர் மோகன்ராஜ், வேளாண்மை துறையின் செயல்பாடுகள், திட்டங்கள், மண்வளம் காப்பதின் அவசியம், மண் பரிசோதனையின் முக்கியத்துவம் மற்றும் நீர் சேகரிப்பு முக்கியத்துவம் பற்றி கூறினார்.

நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் வேளாண்மைத் துணை இயக்குநர் கண்ணன், மானாவாரி விவசாயத்துக்கு நீர் சேகரிப்பு மற்றும் நீர் மேலாண்மையின் முக்கியத்துவம் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

மண்வள அட்டை இயக்கத்தின் கீழ், விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கப்பட்டது. வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலம் நெல் விதை உயிர் உரங்கள், நுண்ணுயிர் உரங்களின் மாதிரிகள் விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. உதவி வேளாண்மை அலுவலர் மரகதம் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ராம்குமார் முருகானந்தம் நெல் விதை கடினப்படுத்துதல் பற்றி விளக்கிக் கூறினார். முன்னதாக, வேளாண்மை அலுவலர் வினோதினி வரவேற்றார். தொழில்நுட்ப மேலாளர் அன்னலெட்சுமி நன்றி தெரிவித்தார்.

## சேவூரில் நிலக்கடலை ஏலம்

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் வரத்து அதிகரித்து ரூ. 1,30,000-க்கு ஏலம் நடைபெற்றது.

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வரத்து குறைந்து, 51 மூட்டைகள் வந்திருந்தன.

குவின்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 6,000 முதல் ரூ.6350 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ. 5,450 முதல் ரூ. 5,900 வரையிலும், மூன்றாம் ரகம் ரூ. 5,100 முதல் ரூ. 5,400 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் 1,30,000 ரூபாய்க்கு ஏலம் நடைபெற்றது.

இந்த ஏலத்தில் திருப்பூர், தாராபுரம், அவிநாசி, அன்னூர், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், கோபி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 10 விவசாயிகளும், 4 வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## அக்கரைப்பட்டி ஏல மையத்தில் ரூ.1.25 கோடிக்கு பருத்தி ஏலம்

வெண்ணந்தூர் அருகே அக்கரைப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் திங்கள்கிமமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில், 5,933 மூட்டைகள் ரூ.1.25 கோடிக்கு ஏலம் போனது.

ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்துக்குள்பட்ட இந்தக் கூட்டுறவு வங்கி வளாகத்தில் நடைபெற்ற ஏலத்துக்கு அக்கரைப்பட்டி, மதியம்பட்டி, பொரசல் பட்டி உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளிலிருந்து விவசாயிகள் 60 கிலோ எடை கொண்ட 5,933 சுரபி ரக பருத்தி மூட்டைகளை ஏலத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதில், திருச்செங்கோடு, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், சேலம் ஆகிய ஊர்களிலிருந்து 50-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற ஏலத்தில், குறைந்தபட்சம் ரூ.5,888-க்கும், அதிகபட்சம் ரூ.6,464-க்கும் பருத்தி ஏலம் போனது. மொத்தம் ரூ.1.25 கோடிக்கு ஏலம் போனது.
ரூ. 55 லட்சக்குக்கு மஞ்சள் விற்பனை: நாமகிரிப்பேட்டை கூட்டுறவு ஏல மையத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மஞ்சள் ஏலத்துக்கு விரலி ரக மஞ்சள் 850 மூட்டை, உருண்டை ரக மஞ்சள் 250 மூட்டை, பனங்காளி 20 மூட்டை என மொத்தம் 1120 மூட்டைகளை விவசாயிகள் கொண்டு வந்தனர்.
இதில், விரலி ரகம் குறைந்தபட்சம் ரூ. 7,707-க்கும், அதிக பட்சம் ரூ.9,612-க்கும் ஏலம் போனது. உருண்டை ரகம் குறைந்தபட்சம் ரூ.6,483-க்கும், அதிகபட்சம் ரூ.8,712-க்கும் ஏலம் போனது.

அதேபோல பனங்காளி ரகம் குறைந்தபட்சம் ரூ.15,749-க்கும் அதிகபட்சம் ரூ.21,012-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 55 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனையானது.

## விதை பரிசோதனை பயிற்சி

தஞ்சாவூர் விதை பரிசோதனை நிலையத்தில் ஒரத்தநாட்டில் உள்ள கால்நடை கல்லூரி மற்றும் ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த முதலாமாண்டு மாணவர்களுக்கான விதை பரிசோதனை தொழில்நுட்பப் பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

தீவன உற்பத்தி புல்வெளி வேளாண்மை பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெற்ற இந்த முகாமில், விதை பரிசோதனை அலுவலர் மு.ப. பிரபாகர், வேளாண்மை அலுவலர் ஹசீனா பேகம் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

இதில், உழவியல் துறை உதவிப் பேராசிரியர் செந்தில்குமார், கால்நடை ஊட்டச் சத்தியல் துறை உதவிப் பேராசிரியர் பழனிவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஏறுமுகத்தில் பருத்தி விலை: மகிழ்ச்சியில் விவசாயிகள்

திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பருத்தி விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டத்தில் நிகழ் பருவத்தில் 5,192 ஹெக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டிருந்தது. விவசாயிகள் அறுவடை செய்த பருத்தி பஞ்சுகளை விற்பனை செய்ய ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் மறைமுக ஏலம் விடப்படுவது வழக்கம். இதையொட்டி, திருவாரூர், குடவாசல், வலங்கைமான் ஆகிய இடங்களில் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விவசாயிகள் பருத்தி பஞ்சுகளை மறைமுக ஏலத்துக்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிகழாண்டுக்கான பருத்தி ஏலம் கடந்த ஜூன் மாதம் 7-ஆம் தேதி தொடங்கியது. வாரந்தோறும் நடைபெறும் இந்த ஏலத்தில் பருத்திக்கான விலை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அதன்படி தொடக்க நாளான ஜூன் 7-ஆம் தேதி ஒரு குவிண்டால் பருத்தி அதிகபட்சமாக ரூ.5039-க்கு விற்பனையானது. இரு மாதங்களாக தொடர்ந்து பருத்தியின் விலை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு செவ்வாய்க்கிழமை ஊட்டியாணி, சேந்தங்குடி, கங்களாஞ்சேரி, கல்லிக்குடி, பழையவலம், மழையூர், சித்தாநல்லூர்,

எட்டியலூர், பிளாக்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து விவசாயிகள் 685 லாட்டுகளில் பஞ்சுகளை ஏலத்துக்கு கொண்டுவந்திருந்தனர்.

செம்பனார்கோயில், சேலம் கொங்கனாபுரம், திருப்பூர், விழுப்புரம், கும்பகோணம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வந்திருந்த வியாபாரிகள் பருத்திக்கு தாங்கள் அளிக்கும் தொகையை ஏலச்சீட்டில் எழுதி ஏலப்பெட்டியில் போட்டிருந்தனர். வேளாண் விற்பனைக் குழு செயலாளர் சேரலாதன், கண்காணிப்பாளர் ரமணி ஆகியோர் ஏலப்பெட்டியை பிற்பகலில் திறந்து வியாபாரிகள் கேட்ட விலையை படித்தனர்.

இதில் அதிகபட்சமாக பருத்தி குவிண்டாலுக்கு ரூ.6,109 விலை கேட்கப்பட்டிருந்தது. குறைந்தபட்சமாக ரூ.5,669 விலையும், சராசரியாக ரூ.5929 விலையும் கேட்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து செயலாளர் சேரலாதன் கூறியது:

திருவாரூர் பகுதியில் நிகழாண்டு அதிகளவில் பருத்தி சாகுபடி செய்திருந்தனர். கோவை பகுதியில் பருத்திக்கான தேவை அதிகமாக இருப்பதால் விலையும் கடந்த சில ஆண்டுகளை காட்டிலும் நிகழாண்டு அதிகரித்துள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் 3,755 குவிண்டால், ஜூலையில் 4,402 குவிண்டால் பருத்தி ஏலத்தின் மூலம் ரூ.4.44 கோடிக்கு விற்பனையானது. பருத்திக்கான விலை வாரந்தோறும் அதிகரிப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## சிறுநீர் பிரச்னைகளுக்கு மழைநீர்

சிறுநீரகக்கல் பிரச்னை தற்போது பரவலாக காணப் படுகிறது. முன்பு ஆண்களிடம் பரவலாக காணப்பட்ட இந்தப் பிரச்னை தற்போது பெண்களிடமும் காணப்படுகிறது. சிறுநீரகக் கல் பிரச்னைகளைத் தீர்க்க இயற்கை மருத்துவத்தில் மழைநீரை அருந்த வேண்டும் என பரிந்துரை செய்கின்றனர். ஏனெனில் நிலத்தடி

நீரை அருந்துவதால் நீரின் தன்மையால் சிறுநீரகக் கல் தோன்ற அதிக சாத்தியக் கூறுகள் உள்ளன. மழை நீரில் இத்தகைய குறைகள் இல்லை. மழைநீரை சேகரித்து சுத்திகரிப்பு செய்து அருந்துபவர்களுக்கு சிறுநீரகக்கல் பிரச்னைகள் மறைகின்றன. மீண்டும் இவை தோன்றுவதில்லை.

## கே.ஆர்.பி., அணையில் இருந்து பாசனத்திற்கு இன்று நீர் திறப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி, கே.ஆர்.பி., அணையில் இருந்து, இன்று பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. இதனால், 9,012 ஏக்கர் பாசனம் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி, கே.ஆர்.பி., அணையில் இருந்து, ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். அணையில், 48 அடி அளவிற்கு தண்ணீர் இருப்பு இருந்தால், ஜூலை மாதமே தண்ணீர் திறந்து விடப்படும். ஆனால், இந்த ஆண்டு அணையின் மதகு பராமரிப்பு பணிக்காக தண்ணீர் வெளியேற்றப்பட்டதால், அணையின் நீர் இருப்பு மிகவும் குறைவாக இருந்தது. இதனால் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில், அணையின் நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழை மற்றும் ஓசூர் கெலவரப்பள்ளி அணையில் இருந்து வந்த தண்ணீர் மூலம், கடந்த, 6 ம் தேதி ,கிருஷ்ணகிரி, கே.ஆர்.பி., அணை, 48 அடியை எட்டியது. இதையடுத்து, அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது குறித்து, கடந்த, 8ம் தேதி அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. இதன்படி இன்று மதியம், 2 மணிக்கு, அணையில் இருந்து பாசனத்திற்கு, இடது கால்வாயில், 80 கன அடியும், வலது கால்வாயில், 75 கன அடியும் தண்ணீர் திறந்து விட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம், 9,012 ஏக்கர் பாசன வசதி பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கே.ஆர்.பி., அணைக்கு தற்போது, 77 கன அடி நீர் வந்துகொண்டுள்ளது. அணையில் இருந்து, ஊற்று கால்வாய் மூலம், 12 கன அடி வெளியேற்றப்படுகிறது. அணையின் மொத்த கொள்ளளவான, 52 அடியில், 51.1 அடி அளவிற்கு தண்ணீர் இருப்பு உள்ளது. அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## நெல்லில் உகந்த ரகங்களை தேர்வு செய்ய விவசாயிகளுக்கு யோசனை

ஈரோடு: "தடப்பள்ளி - அரக்கன்கோட்டை மற்றும் காளிங்கராயன் வாய்க்காலில் நீர் திறந்துள்ளதால், நெல்லில் உகந்த ரகங்களை தேர்வு செய்யும்படி," வேளாண் இணை இயக்குனர் ராமசுப்பிரமணியன் கேட்டுக்கொண்டார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: கடந்த, 12ம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால் டி.என்.பாளையம், கோபி, ஈரோடு, கொடுமுடி, மொடக்குறிச்சி யூனியன் பகுதியில், சம்பா பருவத்துக்கு, கோ-50, கோ-ஆர்-48, கோ-ஆர்-49, ஏ.டி.டி.,-38, 39, ஏ.டி.டி.,-ஆர்-49, கோ-43, பவானி, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி ஆகிய ரகங்களை பயிரிடலாம். பின் சம்பா பருவத்துக்கு, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, ஏ.டி.டி.,-38, ஏ.டி.டி.,-39, ஏ.டி.டி.,-ஆர்-46, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக நெல் வீரிய ஒட்டு ரகம் கோ-ஆர்.எச்-4, டி.கே.எம்.,-13, ஏ.டி.டி.-ஆர்-49, கோ-50 போன்றவைகள் உகந்தது. இவற்றில், கோ-50, ஏ.டி.டி.,-ஆர்-49, ஏ.டி.டி.,-38, ஏ.டி.டி.,-39 போன்ற நெல் ரகங்கள், அனைத்து வட்டார வேளாண் விரிவாக்க மையங்களிலும் போதுமான அளவு இருப்பில் உள்ளது. தவிர, இப்பருவத்துக்கு உகந்த, அதிக மகசூல் தரும், எல்.எல்.ஆர்.34449 நெல் ரகமும் இருப்பில் உள்ளது. உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியம், உயிரியல் பூஞ்சை கொல்லிகளான சூடோமோனஸ், ட்டிரைக்கோடெர்மா போன்றவைகளும் அனைத்து வட்டார வேளாண் விரிவாக்க மையங்களிலும் இருப்பில் உள்ளது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், இயந்திர நடவு மேற்கொள்ள, ஹெக்டருக்கு மானியத்தொகை, 5,000 ரூபாய் வழங்கப்படும். அனைத்து நெல் வயல்களிலும், வரப்பு பயிராக உளுந்து, பாசிப்பயறு, தட்டை போன்றவற்றை சாகுபடி செய்யலாம். இதற்காக களப்பணியாளர்களுக்கு உரிய அறிவுரை வழங்கப்பட்டு, விவசாயிகளுக்கு உரிய தொழில் நுட்ப செய்திகள் வழங்கிட, அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**பார்த்தீனியம் செடிகளால் பாதிப்பு விரைவாக அகற்றினால் சிக்கலில்லை**

ஊட்டி: 'வனப்பகுதியில் அதிகரித்து வரும் பார்த்தீனியம் மற்றும் முட்செடிகளை அகற்றி, சோலை மரங்கள் நடவு செய்யவேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீலகிரி உருளைகிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர்கள் சங்க, 19வது ஆண்டு, மகாசபை கூட்டம் நடந்தது. சங்க தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார்.

இதில், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

நீலகிரியில் குளிரான காலநிலை நிலவுவதால், காய்கறிகளை வாங்க, வியாபாரிகள் வருவதில்லை. பதப்படுத்தாத காய்கறிகளை, மேட்டுப்பாளையம் மண்டிகளில் விற்கவேண்டிய நிலை உள்ளது.

இதனால், கட்டுப்படியான விலை கிடைக்காமலும், எடை குறைவு, இறக்குக்கூலி காரணமாக, விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது.

இதனால், விவசாயிகள் நலன்கருதி, 200 கடைகள் ஒருங்கே அமையும் வகையில், மேட்டுப்பாளையத்தில், 50 ஏக்கர் பரப்பளவில், 'மெகா' சந்தை ஏற்படுத்தவேண்டும்; பாசனத்திற்கு பயன்படுத்தும் டீசலுக்கு மானியம் வழங்குவதுடன், கிராமப்புற சாலைகளை சீரமைத்து, குளம் மற்றும்

குட்டைகள் அமைக்கவேண்டும்; வன விலங்குகளுக்கு தண்ணீர் கிடைக்க, வனப்பகுதியில் தண்ணீரை தேக்குவதுடன், வனப்பகுதியில் பார்த்தீனியம் மற்றும் முட்செடிகளை அகற்றி, சோலை மரங்கள் நடவுச்செய்யவேண்டும்.

இதனால், வன விலங்குகள் ஊருக் குள் வருவதை தடுக்க முடியும். விவசாயிகள் சலுகைகள் பெற, சிட்டா, பட்டா, அனுபோக சான்று மற்றும் வருமானச் சான்றுகள் உடனுக்குடன் கிடைக்கப்பெற செய்யவேண்டும்.

விவசாயிகளை ஆலோசிக்காமல், வெள்ளைப்பூண்டு கமிஷன் உயர்த்தியதை தவிர்த்து, நான்கு சதவீதமாக, கமிஷன் தொகையை நிர்ணயிக்க வேண்டும் என்பன உட்பட, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திண்டுக்கல்:திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் ஆக., 19ல் காலை 11 மணிக்கு, விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்க உள்ளது.

கடந்த ஜூலை 29ல் நடந்த குறைதீர் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்களுக்கான மேல்

நடவடிக்கை குறித்த கலந்தாய்வும் நடக்க உள்ளது என, கலெக்டர் வினய் தெரிவித்துள்ளார்.

## இன்று ஆவணி துவக்கம்: பூக்கள் விலை உயர்ந்தது

கரூர்: ஆவணி மாதம் இன்று துவங்குவதையொட்டி, கரூர் பூ மார்க்கெட்டில் நேற்று பூக்களின் விலை சற்று உயர்ந்தது. ஆடி மாதத்தில், சுப முகூர்த்தங்கள் இல்லாத நிலையில், பூக்களின் விலை சராசரியாக இருந்தது. இந்நிலையில், இன்று ஆவணி மாதம் துவங்குகிறது. வரும் கார்த்திகை மாதம் வரை, திருமணம் உள்ளிட்ட சுப விஷேச நாள் அதிகளவில் இருக்கும் என்பதால், கரூர் பூ மார்க்கெட்டில், நேற்று பூக்களின் விலை சற்று உயர்ந்தது. மல்லிகை பூ கிலோ, 300 ரூபாயில் இருந்து, 400 ரூபாய்க்கும், முல்லைப்பூ கிலோ, 200 ரூபாயில் இருந்து, 300 ரூபாய்க்கும், அரளிப்பூ கிலோ, 150 ரூபாயில் இருந்து, 180 ரூபாய்க்கும், ஜாதிப்பூ கிலோ, 150 ரூபாயில் இருந்து, 180 ரூபாய்க்கும் விலை உயர்ந்திருந்தது. கரூர், மாரியம்மன் பூ மார்க்கெட் சங்க தலைவர் முருகேசன் கூறுகையில், "கடந்த ஆடி மாதம் பூக்கள் வரத்து அதிகமாக இருந்தது. ஆனால், போதிய விலை இல்லை. ஆவணி மாதம் துவங்கிய நிலையில், பூக்கள் விலை உயர்ந்துள்ளது. இதனால், பூ கட்டும் தொழிலாளிகள், மாலை தொடுப்பவர்கள், நார், நூல் வியாபாரிகளுக்கு அதிக வேலை கிடைக்கும்," என்றார்.

## கறவை பசு மாடுகளுக்கு மடிவீக்க நோய் பரவல்

கிருஷ்ணராயபுரம்: மகிளிபட்டி பகுதியில் பரவிவரும் பசு மாடுகளுக்கு மடிவீக்கம் நோயால், கால்நடை வளர்ப்போர் கவலை அடைந்துள்ளனர். கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் அடுத்த மகிளிபட்டி பகுதியில், விவசாயிகள் கால் நடைகள் வளர்த்து வருகின்றனர். பால் கறக்கும் பசு மாடுகள் அதிகளவில் வளர்த்து வரும் நிலையில், தற்போழுது ஏற்பட்டுள்ள பருவ நிலை மாற்றத்தால், கன்று போட்ட பசு மாடுகளின் காம்பில், பாக்டீரியாவின் தாக்குதல் காரணமாக மடி, காம்பு பகுதிகள் தடித்து, பாலின் நிறம் மாறி வருகிறது. இதனால், மாடுகள் பலம் இழந்து சோர்வு அடைந்து விடுகின்றன. பசு மாடுகளுக்கு மடி நோய் தீவிரமாக பரவிவருவதாக, கால்நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர். கால்நடைத்துறை அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுத்து, மேலும் நோய் பரவுவதை தடுக்க, கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்னர்.

## வேப்ப முத்துக்கள் விலை மூன்று மடங்கு... உயர்ந்தது விளைச்சல் குறைந்ததே காரணம்

ஆண்டிபட்டி: ஆண்டிபட்டி சுற்று வட்டாரப்பகுதியில் விளைச்சல் குறைந்ததால் இந்த ஆண்டு வேப்ப முத்துக்கள் விலை மூன்று மடங்கு வரை உயர்ந்துள்ளது.

குடியிருப்புகள், அரசு அலுவலகம், பள்ளி, கல்லூரி வளாகங்களில் மரம் வளர்ப்பில் வேப்ப மரங்களுக்கு முக்கியத்துவம் இருக்கும். வனப்பகுதிகள், புறம்போக்கு, பட்டா நிலங்களிலும் எந்த வித பராமரிப்பும் இல்லாமல் தன்போக்கில் வளரும் தன்மை கொண்ட இந்த மரத்தின் எந்த பகுதியும் வீணாவதில்லை. அனைத்து பாகங்களிலும் மூலிகைக்குணம் இருப்பதால் கோயில் வளாகங்களிலும் இதனை தெய்வீக மரமாக பாவித்து பலரும் வணங்கி வருகின்றனர்.

வேப்ப எண்ணெய்

ஒவ்வொரு ஆண்டும் கோடையில் வேப்ப மரங்கள் பூத்துக்குலுங்கும். ஜூன் மாதம் துவங்கி செப்டம்பர் வரை அதில் அதிகப்படியான காய்கள், பழங்கள் காய்க்கும். இதன் அனைத்து பாகங்களும் மருத்துவ குணம் கொண்டிருந்தாலும் தேனி மற்றும் வெளிமாவட்ட மில்களில் வேப்ப எண்ணெய், ரசாயனம் இல்லாத இயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்க வேப்ப முத்துக்களே அதிகம்

பயன்படுகிறது. பல்வேறு பகுதியில் இருந்து சேகரிக்கப்பட்டு வரும் வேப்ப முத்துக்களை சில்லரை வியாபாரிகள் வாங்கி, இருப்பில் வைத்து மொத்த வியாபாரிகளுக்கு அனுப்புகின்றனர்.

ஆண்டுதோறும் சீசன் காலத்தில் ஆண்டிபட்டியில் இருந்து நுாறு டன் அளவில் வேப்ப முத்துக்கள் சேகரிக்கப்படுகிறது. சிறுவர்கள், வயதானவர்கள், பெண்கள் உட்பட பலரும் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் இதனை சேகரித்து வருவாய் பெறுவர். வேப்ப முத்துக்களுக்கான தேவை அபரிமிதமாக இருந்தாலும், சேகரிப்பில் உள்ளவர்களுக்கான வருவாய் மிகக் குறைவாகவே கிடைக்கிறது.

பாதிப்பு

இந்த ஆண்டு வேப்ப மரங்கள் பூப்பெடுக்கும் காலத்தில் தொடர்ந்து மழை பெய்ததால் பூக்கள் உதிர்ந்து காய்ப்புத்தன்மை குறைந்து போனது. இதனால் வழக்கமான காய்ப்பில் 10ல் ஒரு பங்கு கூட கிடைக்கவில்லை.

வேப்பமுத்து வியாபாரி டி.ராஜகோபாலன்பட்டி ராதாகிருஷ்ணன் கூறியதாவது:

எந்த ஆண்டும் இல்லாத அளவில், இந்த ஆண்டு விளைச்சல் கடுமையாக பாதிப்படைந்துள்ளது.

ஆண்டிபட்டியில் 50 டன் அளவுக்கு வேப்ப முத்துக்கள் வரத்து இருக்க வேண்டும். தற்போது சீசன் முடியும் தருவாயில் 5 டன் அளவு கூட வரத்து இல்லை. அதனை சேகரிப்போரும் குறைந்து விட்டனர்.

கடந்த ஆண்டு வேப்ப முத்து கிலோ ரூ. 25 முதல் 30 வரை இருந்தது. இந்த ஆண்டு கிலோவுக்கு ரூ. 70 வரை கொடுத்தாலும் முத்துக்கள் சேகரித்து யாரும் கொண்டு வருவதில்லை, என்றார்.

## கொப்பரை தேங்காய் 26 லட்சத்திற்கு விற்பனை

ஜலகண்டாபுரம்: ஜலகண்டாபுரத்தில், 900 மூட்டை கொப்பரை தேங்காய், 26 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஜலகண்டாபுரம் டி.சி.எம்.எஸ்., கொப்பரை தேங்காய் கொள்முதல் மையத்திற்கு, 900 மூட்டை கொப்பரை தேங்காய்கள் வந்தது. கிலோ 58 முதல், 60 ரூபாய் 80 பைசா வரை விலைபோனது. 900 மூட்டை கொப்பரை தேங்காய், ரூ.26 லட்சத்துக்கு விற்பனையானது.

## வாழைஇலை விலை இருமடங்கு உயர்வு

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் பகுதிகளில் வாழை இலைகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதோடு, விலை இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது.

கிராமக் கோயில்களில் முளைப்பாரி விழா, பூக்குழி விழா, சர்ச்சுகளில் தேர் பவனி விழா தொடர்ந்து நடக்கிறது. விழாவில் பங்கேற்கும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. இதற்கு பெரும்பாலும் வாழை இலைகளை பயன்படுத்துவதால் கிராக்கி அதிகரித்துள்ளது. மாதம் முதல் ஆவணி மாதம் வரை கிராமப் பகுதிகளில் உள்ள கோவில்களில் அதிகளவில் விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இதனால் விலையும் இருமடங்கு அதிகரித்துள்ளது.

கடந்த மாதம் ரூ. 450க்கு விற்பனையான 200 இலைகள் கொண்ட பெரிய கட்டு தற்போது ரூ. 900 ஆக அதிகரித்துள்ளது. ரூ. 300க்கு விற்பனையான சிறிய கட்டு ரூ.600 ஆக அதிகரித்துள்ளது. இதுபோன்று வாழைத்தார் விலையும் ஜெட் வேகத்தில் எகிறியுள்ளது. ரூ.200க்கு விற்பனையான வாழைத்தார் தற்போது ரூ.600க்கு விற்பனையாகிறது. விலை அதிகரித்துள்ளதால் வாழை விவசாயிகள், வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## ரூ. 55 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டையில், நேற்று, 55 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் வர்த்தகம் நடந்தது. நாமகிரிப்பேட்டை, ஆர்.சி.எம்.எஸ்.,ல் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில், விரலி ரகம் அதிகபட்சம், 100 கிலோ மூட்டை, 9,612 ரூபாய், குறைந்தபட்சம், 7,707 ரூபாய்க்கும் விலை போனது. உருண்டை ரகம் அதிகபட்சம், 8,712 ரூபாய், குறைந்தபட்சம், 6,483 ரூபாய்க்கும் விற்பனையானது. பனங்காலி ரகம், அதிகபட்சம், 21 ஆயிரத்து,012 ரூபாய், குறைந்தபட்சம், 15, ஆயிரத்து, 749 ரூபாய்க்கும் ஏலம் போனது. விரலி, 850 மூட்டைகளும், உருண்டை, 250, பனங்காலி, 20 என, மொத்தம், 1,120 மூட்டைகளும், 55 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மொத்த விலை பண வீக்கம் 3.55% ஆனது




புதுடெல்லி: ஜுலை மாத மொத்த விலை பண வீக்கம் 3.55 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது கடந்த 23 மாதங்களில் இல்லாத உயர்வாகும். இதற்கு முன்பு 2014ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில்தான் மொத்த விலை பண வீக்கம் 3.74 சதவீதத்தை எட்டியிருந்தது. காய்கறி, பருப்பு விலை உயர்வே இதற்கு காரணம் காய்கறி 28.05%, பருப்பு வகைகள் 35.76% உருளைக்கிழங்கு 58.78%, சர்க்கரை 32.33%, பழங்கள் 17.30% உயர்ந்துள்ளது. மொத்த உணவு பண வீக்கம் 11.82% ஆகியுள்ளது என வர்த்தக அமைச்சக புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

## 1.25 கோடிக்கு பருத்தி விற்பனை

ராசிபுரம், : ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்குட்பட்ட அக்கரைப்பட்டி கிளையில் பருத்தி ஏலம் நடந்தது. அக்கரைப்பட்டி, மதியம்பட்டி, பொரசல்பட்டி உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பருத்தி மூட்டைகளுடன் பங்கேற்றனர். பின்னர், நடைபெற்ற ஏலத்தில் சுரபி ரகம் குவிண்டால் □5888 முதல் □6464 வரையிலும் விற்பனையானது. ஆக மொத்தம் 5,933 மூட்டை பருத்தி □1.25 கோடிக்கு ஏலம் போனது. திருச்செங்கோடு, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், சேலம் உள்ளிட்ட ஊர்களிலிருந்து 50க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டு பருத்தி மூட்டைகளை ஏலத்தில் எடுத்தனர்.

## ஊடுபயிராக துவரை நடவு செய்தால் மானியம் : வேளாண் உதவி இயக்குநர் தகவல்

கிருஷ்ணகிரி: வயல் வரப்பினில் ஊடுபயிர் செய்தால் மானியம் வழங்கப்படும் என கிருஷ்ணகிரி வேளாண்மை உதவி இயக்குநர் ரமேஷ் ஒய் நர்குந்த் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி வட்டாரத்தில் பயறு வகை பயிர்களின் உற்பத்தியை மேம்படுத்தவும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் வேளாண்மை துறை மூலம் நிலக்கடலை, பருத்தி பயிரிடும் போது ஊடுபயிராக துவரை அல்லது அவரையும் பயிரிடலம்.

இதே போல் நெற்பயிர் வயலின் வரப்பில் உளுந்து, காராமணியும், கரும்பு பயிரின் வரப்பில் துவரையும், பருத்தி வரப்பில் துவரையும், மேலும் காய்கள், பழங்கள், பயிரிடும் தோட்டங்களில் ஊடுபயிராக பயறு வகை பயிர்கள் பயிரிடலாம். இவ்வாறு பயிரிடும் விவசாயிகளுக்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.150 மானியமாகவும், ஆமணக்கு பயிரினை வரப்பினில் பயிரிட்டால் எக்டேருக்கு ரூ.300 மானியமாகவும், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் கிருஷ்ணகிரி வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

எனவே கிருஷ்ணகிரி வட்டாரத்தில் நெல், மனிலா, கரும்பு, பருத்தி ஆகிய பயிரிடும்

விவசாயிகள் வரப்புகளில் பயறு மற்றும் ஆமணக்கு உற்பத்தியை பெருக்கி, வருமானத்தை பெருக்கிடலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மக்காச்சோளத்தில் செயல்விளக்க பாத்தி அமைக்க விவசாயிகளுக்கு ரூ.4,000 மானியம்

திருச்சி: மக்காச்சோளம் சாகுபடியில் உயரிய செயல்விளக்க பாத்திகள் அமைக்க விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.4ஆயிரம் மானியம் வழங்கப்பட உள்ளதாக வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார். இது குறித்து திருச்சி வேளாண்மை இணை இயக்குநர் சந்திரசேகரன் கூறியதாவது: திருச்சி மாவட்டத்தில் 13,000 எக்டேர் பரப்பளவில் மக்காச்சோளம் மானாவாரியாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் சிறு தானியங்கள் திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்டத்திற்கு 1000 எக்டேரில் மானாவாரி மக்காச் சோளத்தில் உயரிய தொழில் நுட்ப செயல் விளக்க பாத்திகள் அமைக்க இலக்கு பெறப்பட்டுள்ளது. இச்செயல்விளக்க பாத்திகள் புள்ளம்பாடி வட்டாரத்தில் 500 எக்டேரிலும், மண்ணச்சநல்லூர் வட்டாரத்தில் 300 எக்டேரிலும், துறையூர் மற்றும் உப்பிலியபுரம் வட்டாரத்தில் தலா 100 எக்டேரிலும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இச்செயல்விளக்க பாத்திகள் அமைத்திடும் விவசாயிகளுக்கு ஒரு எக்ேடருக்கு ரூ.4000 மான்யம் வழங்கப்படுகிறது. செயல்விளக்க பாத்திகள் அமைக்கும் விவசாயிகளுக்கு திரவ உயிர் உரம் அசோஸ் பைரில்லம் அரை லிட்டர், பாஸ்போபாக்டீரியா அரை லிட்டர், நுண்ணூட்டச் சத்து 12.5 கிலோ ஆகியவை வேளாண்மை துறை மூலம் வழங்கப்பட உள்ளது. மேலும் பார் அமைத்து விதைப்பதற்கு ஒரு எக்டேருக்கு ரூ.1,050ம் மற்றும் விதைகளுக்கு ஒரு எக்ேடருக்கு ரூ.1,500ம் பின்னேற்பு மானியமாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படவுள்ளது.

எனவே, புள்ளம்பாடி, மண்ணச்சநல்லூர், துறையூர் மற்றும் உப்பிலியபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள மானாவாரி மக்காச்சேளாம் பயிரிடும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி இயக்குநர்களை அணுகி தொழில்நுட்பம் மற்றும் மானியம் பெற்று உயரிய செயல்விளக்கப் பாத்திகள் அமைத்து அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரசேகரன் கூறினார்.

## எண்ணெய்வித்து இயக்க திட்டத்தின்கீழ் மானியம் பெற விவசாயிகளுக்கு அழைப்பு

பட்டுக்கோட்டை: தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் எண்ணெய்வித்து இயக்கம் என்ற துணை திட்டத்தின்கீழ் பல்வேறு மானியங்கள் பெற விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பட்டுக்கோட்டை அடுத்த திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் வெளியிட்டுள்ள அறிக்கை: நடப்பு 2016 17ம் நிதியாண்டில் திருவோணம் வட்டாரத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் எண்ணெய்வித்துகள் இயக்கம் என்ற துணை திட்டத்தின்கீழ் நிலக்கடலை விதைக்கும் கருவி கொண்டு வரிசை முறையில் கடலை விதைப்பு பணி மேற்கொண்டு ஊடுபயிராக பயறுவகை பயிர்கள் சாகுபடி செய்வதற்கு எக்டேருக்கு ரூ.1,000 மானியமாக வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பொருள் இலக்காக 14 எக்டேரும், நிதி இலக்காக ரூ.14 ஆயிரமும் பெறப்பட்டுள்ளது. உயிர் உரங்கள் 50 சதவீத மானியத்தில் எக்டேருக்கு ரூ.150 என்கிற மானிய விகிதத்தில் விநியோகம் மேற்கொள்ள பொருள் இலக்காக 90 எக்டேரும், நிதி இலக்காக ரூ.13,500ம் பெறப்பட்டுள்ளது. எள் பயிரில் அதிக மகசூல் கொடுக்கக்கூடிய முக்கிய மகசூல் காரணியான மாங்கனீசு சல்பேட் என்ற நுண்சத்து உரம் 50 சதவீத மானிய விலையில் எக்டேருக்கு ரூ.200 என்கிற மானிய விகிதத்தில் விநியோகம் மேற்கொள்ள பொருள் இலக்காக 40 எக்டேரும், நிதி இலக்காக ரூ.8 ஆயிரமும் பெறப்பட்டுள்ளது.

ஆமணக்கு வரப்பு பயிராக மாதிரி செயல்விளக்கமாக அமைப்பதற்கு பொருள் இலக்காக ஒரு எக்டேரும், நிதி இலக்காக ரூ.300 பெறப்பட்டுள்ளது. நிலக்கடலை பயிரில் அதிக விளைச்சலை கொடுக்கக்கூடிய ஜிப்சம் அடியுரமாக மற்றும் மேலுரமாக இடுவதற்கு எக்டேருக்கு ரூ.750 என்கிற 50 சதவீத மானிய விகிதத்தில் விநியோகம் மேற்கொள்வதற்காக 10 எக்டேர் பொருள் இலக்கும், ரூ.7,500 நிதி இலக்கும் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி திட்ட பயன் பெறுவதற்கு உடனடியாக உங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களை தொடர்பு கொண்டு முன்னுரிமை பதிவேட்டில் தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்.

தினத் தந்தி

## இன்றைய வேளாண் செய்திகள்

### புதிய பயிர் காப்பீட்டு திட்டத்தை நிறைவேற்ற ரூ.11 ஆயிரம் கோடி கூடுதலாக தேவை; மத்திய அரசிடம் வேளாண்மைத் துறை அமைச்சகம் கோரிக்கை



புதுடெல்லி,

பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா என்ற புதிய பயிர் காப்பீட்டு திட்டம் கடந்த ஜனவரி மாதம் துவங்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் 4 கோடி விவசாயிகளை கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கான பட்ஜெட்டில் ரூ.5,500 கோடி நிதி இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற ரூ.11 ஆயிரம் கோடி கூடுதலாக தேவை என மத்திய நிதி அமைச்சகத்திற்கு வேளாண்மைத்துறை அமைச்சகம் கோரிக்கை விடுத்துள்ளது.

புதிய பயிர் காப்பீட்டு திட்டத்திற்கு பதிவு செய்வதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டிருப்பதாலும், ஏற்கனவே செயல்பாட்டில் இருந்த தேசிய வேளாண்மை காப்பீட்டு திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.5 ஆயிரம் கோடி பயன்படுத்தப்பட்டு வருவதாலும் கூடுதல் நிதி தேவைப்படுகிறது. மேலும், தற்போது மீதமுள்ள நிதியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள ரூ.476 கோடி வடகிழக்கு மாநிலங்களுக்கானது என்பதால் அவற்றை மற்ற மாநிலங்களுக்காக பயன்படுத்த முடியாது என்பதையும் வேளாண் அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது வரை ஆந்திராவில் 20 லட்சம் விவசாயிகளும், குஜராத்தில் 13.41 லட்சம் விவசாயிகளும், கர்நாடகா மற்றும் மத்திய பிரதேசத்தில் 9 லட்சம் விவசாயிகளும், ஜார்க்கண்ட் மாநிலத்தில் 7.5 லட்சம் விவசாயிகளும் புதிய பயிர் காப்பீட்டு திட்டத்தில் இணைந்துள்ளனர்.

## திண்டுக்கல்லுக்கு, ஒரே நாளில் 25 டன் தக்காளி வரத்து



திண்டுக்கல்லுக்கு ஒரே நாளில் 25 டன் தக்காளி விற்பனைக்கு வந்தது.

காந்தி மார்க்கெட்

திண்டுக்கல் மார்க்கெட்டுக்கு, சுற்று வட்டார பகுதிகள், கொடைக்கானல் மற்றும் ஆந்திரா மாநிலத்தில் இருந்து நாள்தோறும் 200 டன்னுக்கும் மேற்பட்ட காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இங்கிருந்து திருச்சி உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் கேரள மாநிலத்திற்கும் காய்கறிகள் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

திண்டுக்கல்லில் 3 மாதத்திற்கு முன்பு தக்காளி ஒரு கிலோ ரூ.60 முதல் ரூ.80 வரையில் விற்பனை ஆனது. கடந்த மாதம் கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரையில் விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் தக்காளி விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதையொட்டி நேற்று கிலோ ரூ.6–க்கு விற்பனை செய்யப்பட்டது.

இதுகுறித்து காய்கறி வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

25 டன் தக்காளி

திண்டுக்கல் மார்க்கெட்டுக்கு நாள்தோறும் தக்காளி வரத்து அதிகரித்து வருகிறது. நேற்று ஒரே நாளில் மட்டும் 25 டன் தக்காளி விற்பனைக்கு வந்தது. அதனால் தக்காளி விலை வீழ்ச்சியடைந்தது. அடுத்த மாதம் முகூர்த்த நாட்களில் தேவை அதிகரிப்பு மற்றும் வரத்து குறைந்தால் தக்காளி விலை உயர வாய்ப்பிருக்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மார்க்கெட்டில், கத்தரிக்காய், உருளைக்கிழங்கு, கேரட் ஆகியவை கிலோ ரூ.30–க்கும், பீன்ஸ், அவரைக்காய் சேனைக்கிழங்கு கிலோ ரூ.40, சவ்சவ், கறிவேப்பிலை கிலோ ரூ.20, புதினா, மல்லி இலை ஒரு கட்டு தலா ரூ.20–க்கும் நேற்று விற்பனை ஆனது.

## அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.10¾ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை



அந்தியூர்,

அந்தியூர் ஒழுங்குமுறைக்கூடத்தில் ரூ.10¾ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை ஆனது.

ஏலம்

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று விவசாய விளைபொருட்கள் ஏலம் நடந்தது.

இந்த ஏலத்துக்கு அந்தியூர், அத்தாணி, வெள்ளித்திருப்பூர், சென்னம்பட்டி, எண்ணமங்கலம், பர்கூர், ஒலகடம் மற்றும் கர்நாடக மாநிலம் ராமபுரம், மாதேஸ்வரன் மலை உள்பட பல்வேறு பகுதியில் இருந்து 400–க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்களுடைய விவசாய விளைபொருட்கள் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.

14 ஆயிரம் தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதில் சிறிய தேங்காய் ஒன்று 2 ரூபாய் 70 காசுக்கும், பெரிய தேங்காய் ஒன்று 8

ரூபாய்க்கும் ஏலம் போனது. தேங்காய் மொத்தம் ரூ.1 லட்சத்துக்கு விற்பனை ஆனது.

<u>கொப்பரை தேங்காய்</u>

கொப்பரை தேங்காய் 80 மூட்டைகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டாலுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 405–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 959–க்கும் விற்பனை ஆனது. கொப்பரை தேங்காய் மொத்தம் ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

வெள்ளை எள் 12 மூட்டைகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டிருந்தது. இது குவிண்டாலுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.6 ஆயிரத்து 329–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.8 ஆயிரத்து 129–க்கும் ஏலம் போனது. வெள்ளை எள் மொத்தம் ரூ.75 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது.

மக்காச்சோளம் 250 மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இது குவிண்டாலுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.1,669–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,747–க்கும் விற்பனை ஆனது. மக்காச்சோளம் மொத்தம் ரூ.3 லட்சத்து 50 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

<u>ரூ.10¾ லட்சம்</u>

நிலக்கடலை 205 மூட்டைகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டிருந்தன. நிலக்கடலை (பச்சை) குவிண்டாலுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.2 ஆயிரத்து 652–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.3 ஆயிரத்து 600–க்கும் நிலக்கடலை (காய்ந்தது) குவிண்டாலுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 669–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.6 ஆயிரத்து 19–க்கும் ஏலம் போனது. நிலக்கடலை மொத்தம் ரூ.3 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. விவசாய விளைபொருட்கள் மொத்தம் ரூ.10 லட்சத்து 75 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது.

ஈரோடு, சத்தியமங்கலம், கோவை, மேட்டுப்பாளையம், சேலம், தர்மபுரி மற்றும் கர்நாடக மாநிலம் மைசூர் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் இதில் கலந்து கொண்டு விவசாய விளைபொருட்களை போட்டி போட்டு ஏலம் எடுத்து சென்றனர்.

## தோவாளை மார்க்கெட்டில் பிச்சி பூ விலை ரூ.500 உயர்வு ஒரு கிலோ ரூ.750–க்கு விற்பனை



தோவாளை பூ மார்க்கெட்டில் நேற்று பிச்சி பூ விலை ரூ.500 உயர்ந்தது. இதனால் ஒரு கிலோ ரூ.750–க்கு விற்பனை செய்யப்பட்டது.

பூ விற்பனை

குமரி மாவட்டத்தில் நாகர்கோவில் அருகே உள்ள தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தினமும் குமரி, நெல்லை, மதுரை உள்பட பல இடங்களில் இருந்தும் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பூக்களை விற்பனை செய்வதற்காக கொண்டு வருகிறார்கள்.

இங்கு பூக்கள் சில்லறையாகவும், மொத்தமாகவும் பூக்கள் விற்பனை செய்யப்படும். தினமும் பூக்கள் அதிகாலையிலேயே மார்க்கெட்டிற்கு வந்துவிடும். இதனால் பூக்களை ஏலம் எடுக்க வரும் சிறு மற்றும் பெரிய வியாபாரிகள் பூக்களுக்காக காத்து நின்று ஏலம் எடுத்து செல்வார்கள்.

பிச்சி ரூ.500 உயர்வு

இந்நிலையில் நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.250–க்கு விற்பனை செய்யப்பட்ட பிச்சி பூ, நேற்று விலை ரூ.500 உயர்ந்தது. இதனால் ஒரு கிலோ ரூ.750–க்கு விற்பனை செய்யப்பட்டது. பிச்சி பூவின் விலை உயர்வு குறித்து பூ வியாபாரி விஸ்வநாதன் கூறுகையில் " இன்று (நேற்று) ஆடி மாதம் கடைசி செவ்வாய்க்கிழமை என்பதால் பிச்சி பூக்களின் தேவை அதிகமாக இருந்தது. மேலும், நாளை (இன்று) புதன்கிழமை முகூர்த்த தினம் என்பதாலும் பிச்சி பூக்களை ஏலம் எடுக்க கடுமையான போட்டி வியாபாரிகளிடையே நிலவியது. மார்க்கெட்டிற்கு வந்த பிச்சி பூக்களை வியாபாரிகள் உடனே ஏலம் எடுத்து சென்றனர். இதனால் தான் விலை உயர்ந்து காணப்பட்டது" என்று கூறினார்.

ஒரு கிலோவிற்கு...

மேலும், மற்ற பூக்களின் விலை விவரம் ஒரு கிலோவிற்கு வருமாறு:– முல்லை ரூ.600–க்கும், சம்பங்கி ரூ.225–க்கும், கனகாம்பரம் ரூ.400–க்கும், மல்லிகை ரூ.350–க்கும், ஸ்டெம்புரோஸ் ரூ.160–க்கும், பட்டன்ரோஸ் ரூ.120–க்கும், மருக்கொழுந்து ரூ.120–க்கும், வெள்ளை சிவந்தி ரூ.120–க்கும், அரளி ரூ.120–க்கும், சிவந்தி ரூ.100–க்கும், கொழுந்து ரூ.100–க்கும், கேந்தி ரூ.35–க்கும், மஞ்சள் கேந்தி ரூ.35–க்கும், வாடாமல்லி ரூ.30–க்கும், கோழிப்பூ ரூ.30–க்கும், துளசி ரூ.20–க்கும், மாம்பழகேந்தி ரூ.20–க்கும், பச்சை ரூ.7–க்கும், தாமரை (100 எண்ணம்) ரூ.300–க்கும், ரோஜா (100 எண்ணம்) ரூ.40–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டைக்கோழி விலை கிலோவுக்கு ரூ.6 உயர்வு



நாமக்கல்,

நாமக்கல் மண்டலத்தில் முட்டைக்கோழி கிலோ ரூ.70–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த முட்டைக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.6 உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டைக்கோழி விலை கிலோ ரூ.76 ஆக உயர்ந்து உள்ளது.

முட்டை கொள்முதல் விலை 355 காசுகளாகவும், கறிக்கோழி விலை கிலோ ரூ.58 ஆகவும் நீடிக்கிறது. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை என பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## செய்திகளை குறைத்துவிடாதீர்கள்




டெலிவிஷனின் தாக்கம் என்னதான் மக்களிடம் வெகுவாக இருந்தாலும், விவசாயிகள், மீனவர்கள், ஏன் வாகனங்களில் செல்லும்போது செய்திகளைக் கேட்டுக்கொண்டே செல்பவர்களுக்கு அகில இந்திய வானொலியின் சேவை அதிலும் குறிப்பாக, செய்திகள் ஒலிபரப்பும் சேவை மிக இன்றியமையாததாகும். இன்றைக்கும் மலைப்பகுதிகளிலும், கிராமப்பகுதிகளிலும், வயல்காடுகளில் வேலைசெய்யும் விவசாயிகள், படகுகளில் சென்று மீன்பிடிக்கும் மீனவர்கள் எல்லோருமே தங்கள் பக்கத்தில் டிரான்சிஸ்டர் வைத்துக்கொண்டு வானொலியில் செய்திகள் கேட்பது வழக்கமான நடைமுறைகளில் ஒன்றாக இருக்கிறது.

இந்த நிலையில், அந்தந்த பகுதி உள்ளூர் செய்திகளுக்கு முக்கியத்துவம் கிடைக்கும் என்றவகையில் மாவட்டந்தோறும் வானொலி நிலையம் அமைக்கவேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்துவரும்நிலையில், மத்திய அரசாங்க செய்திகள் ஒலிபரப்பு அமைச்சகம், சுதந்திரம் அடைவதற்கு முன்பே தொடங்கிய திருச்சி வானொலி நிலையத்தில் இருந்து ஒலிபரப்பாகும் தமிழ் செய்தி மற்றும் டெல்லி வானொலியின் ஆகாஷ் வாணியின் தமிழ் செய்தி ஒலிபரப்பு ரத்துசெய்ய திட்டமிட்டுள்ளது. மத்திய அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கை எதிரொலியாகவும், புதிதாக அலுவலர்கள் நியமனம் இல்லை என்ற கொள்கை

அடிப்படையில் ஆள்பற்றாக்குறை காரணமாகவும், தொழில்நுட்பம் வளர்ந்துள்ள நிலையில் பல ஒலிபரப்புகள் தேவையில்லை என்ற காரணத்தாலும், இந்த ஒலிபரப்புகளையெல்லாம் சென்னையில் இருந்தே மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், சென்னையில் இயங்கிவந்த செய்திதாள்கள் பதிவாளர் மண்டல அலுவலகமும், மதுரையில் இயங்கிவந்த பத்திரிகை தகவல் அலுவலகமும் மூடப்பட்டுள்ளது.

தென்மாநிலங்கள் முழுமைக்கும் செய்தித்தாள்கள் மண்டல அலுவலகம் சென்னையில்தான் இருந்தது. அதைத்தான் மூடிவிட்டார்கள். திருச்சியில் உள்ள வானொலியில் 'ஆல் இந்தியா ரேடியோ திருச்சி வானொலி நிலையம் செய்திகள் வாசிப்பது சாந்தி ரமேஷ்' என்ற செய்தியை தினமும் பிற்பகல் 1.45 மணிக்கு 10 நிமிடம் தமிழ் செய்தியாகவும், இதுமட்டுமல்லாமல், பகலில் ஒவ்வொருநாளும் காலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை மணிக்கு ஒருமுறை செய்தி சுருக்கமும் ஒலிபரப்பாகி வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள 56 சதவீத மக்கள் குறிப்பாக, பெரம்பலூர், அரியலூர், கரூர், சேலம், நாமக்கல், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மாவட்ட மக்கள் இந்த திருச்சி வானொலி நிலைய தமிழ் செய்திகளை பெரிதும் நம்பி இருக்கிறார்கள். படகில் மீன்பிடிக்கச்செல்லும் மீனவர்கள் பருவநிலை எப்படி இருக்கிறது?, இன்று மீன்பிடிக்க செல்லலாமா?, செல்லக்கூடாதா?, மழை வருமா?, புயல் வருமா? என்ற தகவல்களுக்கு எல்லாம் திருச்சி வானொலி நிலைய செய்திகளை நம்பியே இருக்கிறார்கள். காவிரி டெல்டா விவசாய மக்கள் மேட்டூர் அணையில் நீர்மட்டம் எப்படி இருக்கிறது?, எவ்வளவு தண்ணீர் திறக்கப்படுகிறது?, மழை பெய்யுமா? என்பதுபோன்ற விவரங்களையும் அதிலும் குறிப்பாக, பண்ணை இல்லம் என்று விவசாய செய்திக்காகவே திருச்சி வானொலி நிலையத்தை சார்ந்திருக்கிறார்கள். டெல்லி வானொலி நிலைய செய்தியை எடுத்துக்கொண்டால், நீண்ட பல ஆண்டுகளாக அகில இந்திய செய்திகளுக்காக விரும்பி கேட்பவர்கள் நாடு முழுவதிலும் ஏராளமானோர் உண்டு.

இப்போது திடீரென்று திருச்சி வானொலி நிலைய தமிழ் செய்தி மட்டுமல்லாமல், டெல்லி வானொலி நிலையத்தில் ஒலிபரப்பிவரும் தமிழ் செய்திகளும்

நிறுத்தப்படப்போவதாக தகவல்கள் வந்தவுடன், பலத்த எதிர்ப்புகள் எழுந்தன. உடனடியாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை மந்திரி வெங்கையா நாயுடு இந்த உத்தரவை நிறுத்திவைக்க சொல்லி ஆணையிட்டுள்ளார். இந்த ஒலிபரப்புகள் கண்டிப்பாக தொடரவேண்டும். ஒருவேளை சென்னை வானொலி நிலையம் இந்த ஒலிபரப்பை தொடங்கவேண்டியநிலை ஏற்பட்டால், இப்போது திருச்சியில் இருந்து ஒலிபரப்பாகும் செய்திகளில் தரும் அரிய தகவல்கள், பிராந்திய செய்திகள் குறைந்துவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அதுபோல, டெல்லியில் இருந்து ஒலிபரப்பாகும் செய்திகளுக்கு இணையாக தேசிய செய்திகள் சென்னையில் இருந்து ஒலிபரப்பப்படவேண்டும்.

## தஞ்சையில் இருந்து விருதுநகருக்கு 1,200 டன் புழுங்கல்அரிசி சரக்கு ரெயிலில் அனுப்பப்பட்டது



தஞ்சையில் இருந்து சரக்கு ரெயிலில் 1,200 டன் புழுங்கல் அரிசி விருதுநகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நெல் கொள்முதல்

தமிழகத்தில் பொதுவினியோக திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு புழுங்கல்அரிசி, பச்சரிசி, மண்எண்ணெய், சர்க்கரை, பருப்பு போன்றவை வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக வெளிமாநிலங்களில் இருந்தும், வெளிமாவட்டத்தில் இருந்தும் புழுங்கல்அரிசி, பச்சரிசி போன்றவை தஞ்சை

மாவட்டத்திற்கு கொண்டு வரப்படும். அதேபோல் தஞ்சையில் இருந்தும் பிற மாவட்டங்களுக்கு புழுங்கல்அரிசி, பச்சரிசி போன்றவை அனுப்பி வைக்கப்படும்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். இவ்வாறு சாகுபடி செய்யும் நெல் அறுவடை செய்யப்பட்டு, தமிழகஅரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

1,200 டன் புழுங்கல்அரிசி

அவ்வாறு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நெல் பின்னர் பல்வேறு மாவட்டங்களுக்கு பொது வினியோகத்திட்டத்தின் கீழ் வினியோகம் செய்ய அரிசி மூட்டைகளாக அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் விளார், பிள்ளையார்பட்டி, நாஞ்சிக்கோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் இருந்து லாரிகளில் புழுங்கல்அரிசி மூட்டைகள் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டன.

பின்னர் இந்த அரிசி மூட்டைகள் சரக்குரெயிலில் ஏற்றப்பட்டன. மொத்தம் 21 வேகன்களில் 1,200 டன் புழுங்கல்அரிசி ஏற்றப்பட்டது. இதையடுத்து சரக்குரெயில் தஞ்சையில் இருந்து விருதுநகருக்கு புறப்பட்டு சென்றது.